தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு ௨௲௧	மலர்
௪௪	சாதாரண, வைகாசி (1970 — மே — சூன்)	௨

மூன்று மொழிகளில் எண்ணுப் பெயர் அமைப்பு

திரு. டாக்டர். இராம. சுந்தரம்,

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

மொழிகளைப் பல்வேறு குடும்பங்களாகப் பிரித்துள்ளனர். மொழிகளில் காணப்படும் சில அடிப்படைச் சொற்களையும் (basic vocabulary), இலக்கண அமைப்பையும் (Grammatical structure) அடித்தளமாகக் கொண்டு இப்பாகுபாடு செய்யப் பெறும். ஒன்றுபட்ட இலக்கண அமைப்பு, சொற்பட்டியல் இவற்றைக் கொண்ட மொழிகள் ஒரு குடும்பத்தில் உள்ளடக்கப் பெறும். அம்முறையில் தமிழைத் திராவிட மொழிக் குடும்பத்திலும், இந்தியை இந்திய - ஆரிய மொழிக் குடும்பத்திலும், ஆங்கிலத்தை இந்திய - ஐரோப்பிய மொழிக் குடும்பத்திலும் அடக்குவர். இந்திய-ஆரிய மொழிக் குடும்பம் இந்திய - ஐரோப்பிய மொழிக் குடும்பத்தின் ஒரு பிரிவுதான் என்றாலும், சில வேறுபாடுகள் அவற்றுள் உண்டு. இம்மூன்று மொழிக் குடும்பங்களையும் பிரிவினை செய்தவர்கள் தக்க சான்றுகள் பலவற்றைக் காட்டியுள்ளனர். இதனை மேலும் உறுதிசெய்யும் வகையில் இம் மொழிகளில் (தமிழ் - இந்தி - ஆங்கிலம்) வழங்கும் எண்ணுப் பெயர்களின் அடைப்பை (the structure of numerals) எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

தமிழும் ஆங்கிலமும் :- பத்துக்கு மேற்பட்ட எண்களை எண்ணுவதில் இருவகை முறைகள் உண்டு. ஒன்று கூட்டல் வகை; மற்றொன்று பெருக்கல் வகை. கூட்டல் வகையில் தமிழில், பத்துக்குப் பின் தேவையான எண்ணைச் சேர்த்துக்காட்டுகிறோம். பெருக்கல் வகையில் பத்துக்கு முன் தேவையான எண்ணைச்

சேர்த்துப் பெருக்குகிறோம். ஆங்கிலத்தில் கூட்டும்போதும் பெருக்கும்போதும் தேவையான எண்ணைப் பத்துக்கு முன் சேர்த்து வழங்குகிறோம்.

	தமிழ்	ஆங்கிலம்
1	பத்து	ten
2	பதினொன்று	eleven
3	பதினைந்து	fifteen
4	பதினேழு	seventeen
5	பதினெட்டு	eighteen
6	இருபது	twenty
7	முப்பது	thirty
8	அறுபது	sixty
9	எழுபது	seventy

இவ்வரிசைகளில் முதல் 5 எண்களும் கூட்டல் வகை; கடைசி 4 எண்களும் பெருக்கல் வகை. தமிழில் கூட்டல் வகையில் பெரிய எண்ணான பத்து முதலிலும் சிறிய எண்கள் அதனை அடுத்தும் வரக் காண்கிறோம். ஆங்கிலத்தில் சிறிய எண்கள் முதலிலும் பத்து என்பதைக் குறிக்க வரும் '-teen' என்பது பின்னும் வரக் காண்கிறோம். பெருக்கல் வகையைப் பொறுத்த மட்டில் தமிழில் இம்முறைமை (order) மாறியிருக்கக் காண்கிறோம். சிறிய எண் முதலிலும் பெரிய எண் அதனை அடுத்தும் வருகின்றன. ஆனால் ஆங்கிலத்திலோ முறைமையில் மாற்றம் எதுவும் இல்லை. மாறாக, '-ty' என்கிற உருபன் (morpheme) காணப்படுகிறது.

sixteen — 16
sixty — 60

16-ஐ 60 ஆக மாற்ற 'teen' என்பதை 'ty' யாக மாற்ற வேண்டியுள்ளது. இங்கு இரண்டு தனித்தனி உருபன்கள் பயன்படுத்தப் படுகின்றன.

'—teen' — கூட்டல் பத்து உருபன் (additive ten)
'—ty' — பெருக்கல் பத்து உருபன் (multiplying ten)

ஆங்கிலத்தில் உள்ளதுபோல இருவேறு உருபன்கள் தமிழில் இல்லை. அதற்கு மாறாக, ஏற்கனவே உள்ள உருபன்கள் முறை மாற்றி அமைப்பது மூலம் 'பதினாறு' 'அறுபது' ஆக்குகிறோம் இதில் இரு மொழிகட்கிடையே உள்ள எண்ணுப் பெயர்

அமைப்பில் காணப்படும் வேறுபாடாகும். இவ்வேறுபாட்டைப் பத்து முதல் இருபது வரை ஒவ்வொன்ருகக் காட்டி எண்ணுவதிலும், பத்துப் பத்தாக எண்ணுவதிலும் காண்கிரும்.

இந்தியும் தமிழும் :- தமிழில் முழு எண்ணையும் அதன் பின்னத்தையும் (fraction) சேர்க்கும்போது, முதலில் முழு எண்ணும் அதன் பின் பின்னமும் வரக் காண்கிரும். இந்தியில் இது தலைகீழாக உள்ளது.

தமிழ்	இந்தி
நாலரை	சாடே சார்
ஏழரை	சாடே சாத்
ஒன்பதரை	சாடே நவ்.

இந்த வகையில் ஆங்கிலம் தமிழோடு ஒத்துள்ளது.

தமிழ்	ஆங்கிலம்
நாலரை	four and a half
ஏழரை	seven and a half

எனினும், மேலே காட்டிய வேறுபாடு இவ்விரு மொழிகளையும் பிரிக்க உதவுகிறது. இவ்வமைப்பு வேறுபாடுகளால் இம்மூன்று மொழிகளும் வெவ்வேறு குடும்பத்தில் அடக்கப்பட்டமை நியாயப்படுத்தப்பட்டுள்ளது எனலாம்.

★ ★ ★

சங்க நிகழ்ச்சிகள்

1 கலந்துரையாடல். 15—6—70 திங்கட்கிழமை மாலை நான்கு மணியளவில் சங்கத்தில் கலந்துரையாடல் நிகழ்ச்சி யொன்று நடைபெற்றது. திரு. சாலை இளந்திரையன் அவர்கள் இலக்கண, இலக்கிய, கல்வெட்டு, மற்றும் கலைகள் தொடர்பான அறிஞர்களுடன் கலந்துரையாடி, அவர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்தார். பழைய கிரேக்க வாழ்வைப் பற்றி மேலை நாட்டினர் எழுதியுள்ளதைப் போல் சங்கக்காலத் தமிழ் வாழ்வை விளக்கும் ஆய்வுப் பெருநூல் எழுதி வெளியிடுவதற்கு அவண் வந்திருந்த தமிழறிஞர் பலரும் தத்தம் கருத்தினைத் தெளிவுபடுத்தினர்.

சொற்பொழிவுகள். சங்கத் தமிழ்ப் பெருமன்றத்தில் 15—6—70 திங்கள் மாலை ஆறு மணியளவில் இலக்கியச் சிறப்புக்கூட்டம் நிகழ்வுற்றது. அதுபோழ்து சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு. அன்பு கணபதி அவர்கள் தலைமையில் திரு. சாலைஇளந்திரையன் அவர்களும், திருமதி. சாலினி இளந்திரையன் அவர்களும் சொற்பொழிவாற்றினர். சங்கத் தலைவர் அவர்கள் வந்திருந்தோரை வரவேற்றுப் பேசுகையில் திரு. அன்பு கணபதி அவர்கள் பல்லாண்டு காலமாகத் தமிழிற்குத் தொண்டு செய்து வருவதுடன் தமிழகத் தமிழாசிரியர் கழகப் பொதுச் செயலாளராகவும் மாணவர் மன்றச் செயலாளராகவும் பொறுப்பேற்றுச் செயல்பட்டு வருவதையும்: தில்லிப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் திரு. சாலை இளந்திரையன் அவர்களும், அவர் தம் துணைவியாரும் பழந் தமிழர் வாழ்வியல் முறை பற்றி ஆய்வுப் பெருநூல் எழுதி வெளியிடும் பணியில் ஈடுபட்டிருப்பதைப்பற்றியும் அவையோர்க்கு மகிழ்வுடன் எடுத்துக் கூறினர்கள்.

திரு. அன்பு கணபதி அவர்கள் தம் தலைமையுரையில் தமிழவேள். த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் தமிழுக்குச் செய்த பல்வேறு தொண்டுகளையும், சிறப்பாக 1938 இல் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை முன்னின்று நடத்தியதையும் எடுத்துக் கூறினர்கள். மேலும் இக்கால மாணவர்கள் படிப்பில் ஊக்கத்துடன் ஈடுபட வேண்டியதன் இன்றியமையாமையை வலியுறுத்தினர்கள். பின்னர் திருமதி. சாலினி இளந்திரையன் அவர்கள் '**சமுதாய நோக்கில் தமிழ் இலக்கியம்**' என்னும் தலைப்பிலும் திரு. சாலைஇளந்திரையன் அவர்கள் **பாரதி ஏந்திய தீப்பந்தம்** எனும் தலைப்பிலும் சொற்சுவை, பொருட்சுவைபடச் சொற்பொழிவாற்றினர்கள். தலைவர் தம் முடிவுரையில் நட்புறவுக்குச் சான்றாய்த் திகழ்ந்த கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையாரைப் பற்றிக் குறிப்பிட்டு, அவர் நரை, திரையின்றிப் பல்லாண்டுகள் வாழ்வதற்குரியக் காரணங்களைக் கூறும் "**யாண்டு பலவாக நரையிலவாகுதல்**" என்னும் புறப்பாடலை விளக்கமாக எடுத்துக் கூறினர். புலவர் கல்லூரி முதல்வர் திரு. செயச்சந்திரன் அவர்கள் நன்றி கூற, சங்க நாட்டு வாழ்த்துக்களுடன் கூட்டம் இனிதே முடிவுற்றது.

"எதிர்பாராத முத்தம்" ஓர் அறிமுகம்

செஞ்சொற் கொண்டல், புலவர்,
திரு. சொ. சிங்காரவேலன், எம். ஏ., டிப். லிங்.
(அ. வ. அ. கல்லூரி, மாயூரம்.)

1

புதிய கவிதைகளில் மறுமலர்ச்சியை விளைத்த பெருங் கவிஞர் பாரதிதாசன், சமுதாயச் சீர்திருத்தக் கொள்கைகளை அடிப் படையாக வைத்து எண்ணற்ற கவிதைகளை இயற்றினர் அவர். தனிக் கவிதைகள் மட்டுமின்றிச் சில தனி நூல்களும் இயற்றி யுள்ளார். பாண்டியன் பரிசு, எதிர்பாராத முத்தம், தமிழச்சியின் கத்தி முதலிய நூல்கள் புரட்சிப் பேரிலக்கியங்களாக விளங்கு கின்றன.

எதிர்பாராத முத்தம் உண்மைக் காதலின் சிறப்பினை உரைக்கும் உயர் காவியமாக ஒளிர்கின்றது. காதல் மாண்பைக் கவிஞர் விளக்கிடக் கையாண்டிருக்கும் எளிய இனிய கவிதைகள் உள்ளத்தைக் கொள்ளை கொள்கின்றன. படிக்குந்தோறும் படிக்குந்தோறும் உள்ளம் உருகும்படி இளங் காதலர் இருவர் இதய உணர்வுகள் சித்திரிக்கப்பட்டுள்ளன. தூய காதல் நிலை என்ன என்பதும், அதற்குத் தடை வருமாறும், தடை நீக்கிக் காதலர் வெற்றிகொள்ளுமாறும் இனிய போக்கில் எடுத்துரைக்கப் பெறுகின்றன.

2

காரியத்தின் தொடக்கமே சுவை உடையதாக உள்ளது. கீழ்த்திசையில் கதிரவன் உதிக்கும் இனிய வைகறைப்போது.

"உலகம் விளக்கம் உறக் கீழ்த்திசையில்
மலர்ந்தது செங்கதிர்! மலர்ந்தது காலை"

என்று தொடங்குகின்றார், வள்ளியூரில், மறைநாய்கன் வீட்டுப் புள்ளிமான் வெளியிற் புறப்படுகின்றது.

தண்ணீர்த் துறைக்கு வரும் பெண்ணழகியின் தோற்றம் சுவையாக வருகின்றது. நீலப்பூ விழி நிலத்தை நோக்கு கின்றது: கோலச் சிற்றிடைக் கொடிபோல் துவள்கின்றது;

செப்புக் குடத்தை இடது கை சேர்ந்துள்ளது; அப்படி இப்படி வலது கை அசைத்து வருகின்றாள் மங்கை.

"பாதச்சிலம்பு பாடிற்று: நிலாமுகம்
சீதளம் சிந்திற்றும்; செவ்விதழ் மின்னிற்றும்"

என்கின்றார் கவிஞர்.

3

அடுத்த காட்சி தையலர் தண்ணீராடும் தண்ணமுதக் காட்சி பூவைத் தன் கரங்களால் கிள்ளித்தன் மடி சேர்க்கின்றாள் ஒரு பெண். அது கவிஞர் கண்களுக்கு எப்படித் தோன்றுகின்றது! தாமரையின் மீது மற்றோர் தாமரை படிவதைப் போன்று உள்ளது என்கின்றார்.

"கடிமலர் மீது மற்றோர்
கைம்மலர் வைத்துக் கிள்ளி
மடிசேர்ப்பாள் மற்றொருத்தி;
வரும் மூழ்கும் ஓர் பொன்மேனி!"

நீராடிய பின் பூங்கோதை புனிதை என்ற தோழியோடு வருகின்றாள்; முத்து வாங்கப் புறப்பட்ட பொன்முடி சந்திக்கின்றான் அவ்வோவியமகளை. இரண்டு குடும்பத்திடையும் பகை; ஆனால் இந்த இளங்காதலர் இருவர் கொண்டது காதல், எதிரெதிராக இருவரும் நெருங்குகின்ற காட்சியைக் கவிஞர் விளக்க எண்ணுகின்றார், எப்படி? அவள் தொத்துகின்ற கிளி; அவனோ தோளான மணிக்கிளை. அவன் அத்தாணி மண்டபத்து மார்பன்; அவள் அழகிய பட்டத்தரசி! எழில் பொங்கும் இனிய வரிகள் இவை:

"தொத்துகின்ற கிளிக்கெதிரில் அன்னோன் இன்பத்
தோளான மணிக்கிளையும் நெருங்க — மேலும்
அத்தாணி மண்டபத்து மார்பன் அண்டை
அழகியபட் டத்தரசி நெருங்கலானாள்!"

அவள் உள்ளத்தே போராட்டம், "என் விழிகள் அவ்விழியைச் சந்திக்குங்கால் என்ன நடக்கும்" என்று நினைப்பு அவளுக்கு,

"சின்னவிழி ஒளிபெருகும்; இதழ் சிரிக்கும்!
திருத்தமுள்ள ஆடைதனைத் திருத்திக்கொள்வாள்."

என்று அவளது பரபரப்பை — காதலை இரண்டே வரிகளிற் பின்னிவிடுகின்றார் பெருங் கவிஞர். இருவர்க்கும் குடும்பப் பகை நினைவுக்கு வருகின்றது; கொண்ட காதலோ அதை வீழ்த்திப் புறம் காண்கின்றது;

> "முதல் இருந்த நிலைக்குவர, இதழ் சிலிர்க்க
> முல்லைதனைக் காட்டி உடன்மூடி. மிக்க
> அதிகரித்த ஒளிவந்து முகம் அளாவ.
> அடிமூச்சுக் குரலாலே ஒரே நேரத்தில்
> அதிசயத்தைக் காதலொடு கலந்த பாங்கில்
> "அத்தான்" "பூங்கோதை" என்றார்; நின்றாரங்கே"

என்கின்றார் பாவலர்.

> "கையிரண்டும் மெய்யிறுக, இதழ்நிலத்தில்
> கனஉதட்டை ஊன்றினான். விதைத்தான் முத்தம்!
> உச்சிமுதல் உள்ளங்கால் வரைக்கும் உள்ள
> உடலிரண்டும் அணுவனைத்தும் இன்பம் ஏற"

என்று பின்னிகழ்ச்சியைக் கவிஞர் காதலுணர்வில் தோய்ந்து ஓவியமாக்குகின்றார். இருவரும் பிரிகின்றார்கள்; அவள் காலடி ஒன்றெடுத்து வைப்பாள்: திரும்பிப் பார்ப்பாள்; ஓரவிழி சிவப்படைய, அன்னோன் பெண்ணின் ஒய்யார நடையினிலே சொக்கி நிற்பான், தூரம் எனும் ஒரு பாவி இடையில் வந்தான் துடித்ததவர் இருநெஞ்சும் என்று முடிக்கின்றார் புலவர்.

4

மறுநாள் மாமன் மறைநாய்கன் மகளிடம், பூக்கட்டும் பண்டாரம் ஒருவனைத் தூதனுப்புகின்றான் பொன்முடி

"தென்னம்பாளை பிளந்து சிந்திடும் சிரிப்புக்காரி" என்று பண்டாரமும் தானறிந்த வாற்றைக் கூறுகின்றான் இரவிலே, பண்டாரத்தைத் தூது நோக்கி விட்டுக் காளை பொன்முடி உறங்காத கண்ணனாய்க் கிடப்பதைப் புலவர் பாடுவார்;

> "கண்ட பூங்கோதை என்னும்
> கவிதையே நினைப்பாய், அன்னாள்
> தண்டைக்கால் நடை நினைந்து
> தான் அது போல் நடந்தும்.
> ஒண்டொடி சிரிப்பை எண்ணி
> உதடு பூத்தும் கிடப்பான்"

'உதடு பூத்தல்' என்று சிரிப்புக்கு வேருேர் பெயர் சூட்டப் பாரதிதாசனை யன்றி வேறு யாரே வல்லவர்? 'பூங்கோதையைக் கவிதை' எனறே புலவர் கூறுகின்ருர்; ஆம்; அழகே — காதலே கவிதையாகக் காணும் புலவரன்றே இவர்!

நள்ளிருளில் பூங்கோதை வீட்டிற்குச் செல்கின்ருன் பொன்முடி. 'வீணையில் ஓர் தந்தி மெதுவாய் அதிர்ந்ததைப் போல்' அத்தான் என்று அழைத்தாள் அவள். 'ஓங்காரமாய்த் தடவி அன்பின் உயர் பொருளைத் தாங்கா மகிழ்ச்சியோடு' பிடிக்கின்ருனும் பொன்முடி. பின்னர்ப் பூங்கொடியை,

"மாரோ டணைத்து மணற்கிழங்காய்க் கன்னத்தில்
வேரோடு முத்தம் பறித்தான்"

என்கிருர் கவிஞர். முத்தம் விதைத்தான் என்று முன்னர்க் கூறியவர், இங்கே முத்தம் வேரோடு பறித்தான் என்று கூறுவது எத்துணைப் பொருத்தமாக உள்ளது! மறைநாய்கன் பின்னே வந்து கண்டுவிடுகின்ருன். இக்காட்சியை, புன்னை மரத்திற் கட்டிப் பொன்முடியை அடிக்க முயல, 'என்னை அடியுங்கள்' என்று பூங்கோதை, 'அத்தானின் பொன்னுடம்பில் தன்னு டம்பைப் போர்த்தபடி யிருந்தாள். மகளை வீட்டுள் இழுத்துச் செல்கின்ருன் பெற்றவன். பொன்முடியோ, உலராத காயங்க ளோடு, பூங்கோதை தன் பொருட்டுக் கொண்ட துன்பங்களை எண்ணிய நினைவோடு வீடு நோக்கி நடக்கின்ருன்.

பண்டாரத்தின் பால் திருமுகம் ஒன்று கொடுத்தனுப்பு கின்ருள் பூங்கோதை. சன்னல் உள்ளிருந்தபடி அவனை அழைக்க, 'வருக' என்று அழைத்த கைகளின் அசைவை.

'ஒரு செந்தாமரை இதழ்தான்
தென்றலால் உதறல் போல"

என்று உவமைகாட்டி இன்புறுத்துகின்ருர் கவிஞர்.

காதலி தந்த திருமுகத்தைப் பண்டாரத்தினிடமிருந்து பெற்றுப் படிக்க முற்படுகின்ருன் பொன்முடி, 'தணலிலே நின்றிருப்போர் தண்ணீரில் தாவுதல் போல் எழுத்தினை விழிகள் தாவுகின்றன; இதயத்தால் வாசிக்கின்ருனும்' அவன், கடிதம் "பழத்தோட்டம் அங்கே தீராப் பசிகாரி இவ்விடத்தில்" என்று பசியில் தொடங்குகின்றது; தான்படும் துயரம் கூறி, 'கைப்பிடித்

தணைக்கும் முத்தம் அறியார் நிலையை எள்ளிப் பண்டாரம் போற்றன்னுடைய வேடமாற்றி வரவேண்டிப் பின்னர் இவ்வாறு முடித்தான் பேதை;

"குளிர்புனல் ஓடையே! நான் கொதிக்கின்றேன் இவ்விடத்தில்;
வெளியினில் வருவதில்லை! வீட்டினில் கூட்டுக்குள்ளே
கிளியெனப் போட்டடைத்தார் கெடுநினைப்புடைய பெற்றோர்;
எளியவள் வணக்கம் ஏற்பீர் இப்படிக்குப் பூங்கோதை,"

விடியுமுன் துடியிடை எழுந்து காதலன் வரவு நோக்கிக் காத்திருக்கின்றாள் 'கலைக்காத சாத்துபடிச் சிலையைப்போலே' எழுந்தோடி வந்தாள்: பண்டார வடிவிலே பொன்முடி வந்தான். 'தாமரைப் போய்ச் சந்தனத்தில் புதைந்ததைப் போல், தமிழ்ச் சுவடிக் கன்னத்தில், இதழ் உணர்வை நேமமுறச் செலுத்தி நறுங் கவிதைச் சுவையினை நெடுமூச்சுக் கொண்ட மட்டும் உறிஞ்சி நின்று இச்சென்று முடித்தான் முத்தம்? ஆம்; அன்னை பால் கறந்து முடித்தாள். இங்கே மகளோடு இன்பமுத்தம் முடித்தான் இளங் காளை என்பார் கவிஞர்.

5

பெற்றோர்க்குப் பொன்முடி பூங்கோதை காதல் தெரிய வருகின்றது பின்னுளில். பண்டாரமும் உண்மையை அவர்களிடம் உரைத்து விடுகின்றான், எப்படியாவது பொன்முடியை முத்து விற்றுவரச் சொல்லி வடக்கே அனுப்பிடத் தந்தை முடிவு செய் கின்றான்; 'கொஞ்ச நாள் சென்றால் மறப்பான் குளறுபடி" என்பது அவன் கருத்து, தந்தை ஏற்பாட்டின்படிக் "கொப் புளிக்கும் காதல் மனத்தோடு" வடக்கு நோக்கிச் செல்கின்றான் பொன்முடி. மகர வீதியிலே முத்து வாணிகரோடு காதலன் செல்லுவதை மாடிமீது இருந்து கண்டு கண்ணீர் சிந்துகின் றாள் கோதை; விழிக்குறிப்பால் விடை கொள்கின்றான் பொன்முடி.

அழுதிடும் முழுமதியானது பிரிவாற்றாமையைக் கண்ணீரால் எழுதுகின்றார் கவிஞர் "செழுங்கிளையின் பழம்பூப் போன்றும், புதரில் குந்தும் சிட்டுப் போன்றும், தென்னையிலே ஊசலாடி எழுந்தோடும் கிள்ளை போன்றும்" தனதுடம்பில் உயிர் பிரியும் என்று எண்ணுகின்றாள் அவள். 'கள்ளியும் பாலைபோல் கண்ணீர் விட்டுக் கடல்நீரில் சுறாப்போலப் படுக்கை தன்னில்" துள்ளிக் கிடக்கின்றாள் தோகை யனைய பூங்கோதை, அவனைக் கட்டிவைத்து அடித்த புன்னை மரத்தைச் சென்று தழுவுகின்றாள்:

"தொட்டபோதெல்லாம் சுவையேறும் நல்லுடம்பை
விட்டபோதின்ப வெறியெடுக்கும் காதல் மெய்யைக்
கட்டிவைத்த காரணத்தால் புன்னைநீ காரிகைநான்
ஒட்டுறவு கொண்டுவிட்டோம்"

என்று பேசிக் கண்ணீர் வடிக்கின்றாள் பேதை, எப்படியும் பொன்முடியைக் கண்டு மகிழ்ந்திட எண்ணத்தில் உறுதி கொண்டாள் அவள்.

விடியலில் முத்து வாணிகர் கூட்டத்தோடு தானும் வடநாடு நோக்கிப் போகின்றாள், நெடுந்தொலைவுப் பயணம். வடக்கிருந்து பொன்முடியும் பிறரும் தெற்கு நோக்கி வருகின்றபோது, பூங்கோதையும் பிறரும் வடக்கு நோக்கிச் செல்லுகின்றார்கள். இருவரும் சந்திக்கின்றார்கள். இருவரும் சந்தித்த செய்தியை உயிர் ததும்பப் பாடுகின்றார் கவிஞர்.

"நேர்ந்தோடும் இருமுகமும் நெருங்கும்போது
நெடுமரத்தின் மறைவினின்று நீள்வாள் ஒன்று
பாய்ந்ததுமேல்; அவன் முகத்தை அணைத்தாள்; தாரிப்
பளீர் என்று முத்தமொன்று பெற்றாள்"

என்கின்றார். இதற்குமேல் கண்ணீர் வடித்த வண்ணமே இரண்டு வரிகள் எழுகின்றன:

"தீந்தமிழர் உயர்வினுக்குச் செத்தான்! அன்பன்
செத்ததற்குச் செத்தாள் அத் தென்னாட்டன்னம்!"

யாகத்தின் சிறுமையினை உரைத்ததற்காக வடநாட்டார் வஞ்சனையாகப் பொன்முடியைக் கொன்றதாக முடித்துள்ளார் கவிஞர்.

6

இந்த நூலின் இரண்டாம் பகுதியில், தருமையாதீனத் திருமடத்தில் மாசிலாமணி தேசிக சுவாமிகள் திருமுன்பு, மறைநாய்கன் பணிந்தெழுந்து தம் மக்கள் துன்ப வரலாற்றைக் கூறுவதாகவும், குமரகுருபரர் வழி வடக்கே அன்பு நெறியாம் சைவத்தை வளர்க்கத் துணிவதாகவும் கவிஞர் அமைக்கின்றார். குமரகுருபரர் வரலாற்றை மாசிலாமணி தேசிகர் விரிவாகக் கூறுகின்றார்; குமரகுருபரர் வடநாட்டை நோக்கிப் புறப்படுகின்றார். 'எழுதிய ஓவியங்கள் கலைந்தன' என்று அழுது கொண்டே பெற்றோர் மீண்டனர் என்று நிறைவுறுகின்றது கதை.

தமிழகத்து வரலாற்றில், கி.பி. 17ஆம் நூற்றுண்டை உள்ளத்துக் கொண்டு இந்தக் குறுங்காப்பியத்தைப் பாரதிதாசன் பாடியுள்ளார். அழகான உவமைகளும், எளிய கற்பனைகளும் நூலின் எப்பகுதியையும் அழகு செய்கின்றன.

“ அவிசொரிந்தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர் செகுத் துண்ணுமை நன்று ”

என்ற வள்ளுவத்தின்படி, “தென்னுட்டார் தமிழர், சைவர்; சீவனை வதைப்பாதன இன்னல்சேர் யாகந்தன்னை யாம் ஒப்ப மாட்டோம்” என்று பொன்முடி கூறுவது, இக்காதல் கதை ஒரு சமுதாய இலக்கியமாக மலர்வதற்கேற்ற அடிப்படைக் கருவைக் கொண்டமையை இனிது காட்டுவதாகும்.

இதன் அடிப்படையில் வடவர்க்கும் தமிழர்க்கும் போர் நடப்பதாகவும் கற்பனை செல்கிறது. போரில் வெற்றி பெற வியலாது, மறைந்திருந்து தாக்கும்படித் திட்டம் தீட்டி அதில் வெற்றியும் காணுமாறு அமைக்கப்பட்டுள்ளது கதையமைப்பு. எதிர்பாராத முத்தம் வந்து இளங்காதலரை இன்ப உலகிற்கு இணைந்தபோது, எதிர்பாராதபடி, வாளொன்று பாய்கிறது; வாழ்வு முடிகிறது; படிப்போர் கண்களில் கண்ணீர் பாய்கிறது. ஒரு சிறந்த துன்பியற் கற்பனையாக முடிகிறது கதை, கதையின் தொடக்கமோ, உதிக்கின்ற இளஞாயிற்றின் வெயில் ஒளி; கதையின் முடிவோ, இளஞாயிற்றின் வெயில் சாய்ந்து வீழும் நிலை. ஆம்: சரித்திர நாயகன் வாழ்வு சரிந்திடச் செய்யும் வேதனை முடிவு, கண்ணீர்க் கடலில் குளித்தெழுந்த பூங்கோதை காதலனோடு சாவிலும் ஒன்றுபடும் உயர்வு தூய்மை உணர்வுகள் இணைகின்ற வியப்பை உரைப்பதாக உள்ளது.

சுருங்கக் கூறினுல், பாரதிதாசனது “எதிர்பாராத முத்தம்” தமிழ்ப்பண்பு ஒளிர்ந்திடும் மலர்ப் பூங்கா; கவிதைச் சோலை; நயம் செறிந்த நறுங்கவிதைத் தடாகம் என்றுதான் கூற வேண்டும்.

எவ்வளவுதான் காதல் இருந்தாலும், பெண்ணொருத்தி தன் காதலின் ஆழத்தை வெளியேறுபடி எடுத்துச் சொல்வதும், தன் காதலனைத் தேடி வீட்டை விட்டு வெளியேறி நாடுவிட்டு நாடு புறம்போதல் கூறுவதும் இக் காப்பியத்திற் காணக்கிடக்கின்றன. இவை பழந்தமிழ் மரபு காணுப் புதுமைகள் என்று கூறத்தக்கவை.

சென்ற இதழ்த் தொடர்ச்சி.

இளங்கோவின் புலமைச் செல்வம்.

திரு. K. சோமசுந்தரம், பி. ஏ., பி. எல்., தஞ்சை.

மாசற்ற பெரிய உணர்வாற்றலுடன் ஒரு சொல்லேயாயினும் வீணெனத் தொடுத்தல் செய்யா இளங்கோ, கண்ணகிக்கும் கோவலனுக்கும் நடந்த மணவணி பற்றிக் கூறுங்கால் 'மாநகர்க்கீந்தார் மணம்' என்றும், 'காதலற் பிரியாமல் கவவுக்கை ஞெகிழாமல் தீதறுகென ஏத்தி' என்றும் குறிப்பிட்ட வழி, காதலிருவருக்கும் ஊறற்ற நீண்ட பெரு வாழ்வு நிலையின்மை. காரண காரியஇயைபுடன், பெருமை போயினமை நுட்பமும் நயமும்பட நுவலப்பட்டிருத்தல் அறிதற்பாலது. ஈண்டு மணம் மாநகர் மக்கள் மகிழ்ந்து இன்பமுற நிகழ்ந்தது என்றதில், மணமக்கள் இன்பத்தைக் கண்டாரில்லை யென்பதனையும். மங்கல வாழ்த்தில் அமங்கலச் சொற்கள், 'தீது' 'அறு' என்பவை வழங்கப்பட்டமையான், காதலர் பிரிந்து கவவுக்கை ஞெகிழ்ந்து போகும் என்பதனையும் இளங்கோ குறிப்பாற் பெற வைத்த இயல்பு மிக நுண்ணியது. கருத்திருத்தத்தக்க இவ்வியல்பு, இளங்கோவின் சொல்லாரவாரமில்லாத ஆற்றலையும், அமங்கலச் சொற்கள் எவ்வாறு காதலிருவருக்கும் பின்னேற்படும் துன்ப துயர் வாழ்வுக்கு முன் கூட்டியே அடிப்படை கோலின வென்பதைக் குறிக்கும் நுண்ணறிவு சான்ற புலமையினையும் புலப்படுத்தும்.

கண்ணகி வேம்பணிந்த வேந்தன் அவைக்கு விரைவில் பொறிப்பறும் துன்பத்தை உள்ளத்தே கொண்டு சென்றதனை நம் கண்முன் காட்ட,

'நின்றாள், நினைந்தாள். நெடுங்கயற் கண்ணீர் சோர
நின்றாள், நினைந்தாள், நெடுங்கயற் கண்ணீர் துடையாச்
சென்றாள் அரசன் செழுங்கோயில்வாயில் முன்'

என இளங்கோ, பயன் படுத்திய சிறு சொற்களும் குறுந்தொடர்களும், அவரது கருத்தினை விளக்கும் நெறி உரம் பெற்றமை காணப்படும். மற்றும் தென்னனது ஆவியையும் போக்கி செல்வத்தையும் தேய்க்கும் படையாக கண்ணகியின் கண்ணீரின் ஆற்றல் விளங்கியதை, இளங்கோ, திண்ணமாகக் கருதியது ஈங்கு ஒருவாறு உணரப்படும்.

சொல் மணங் கமழும் வழக்குரை காதையில், கையினிற் றனிச் சிலம்போடு கண்ணகி, மாறன் வாயிற் காப் போரை நோக்கி

“வாயிலோயே! வாயிலோயே!
அறிவறை போகிற் பொறியறு நெஞ்சத்து
இறை முறை பிழைத்தோன் வாயிலோயே!
இணையரிச் சிலம் பொன்றேந்திய கையள்
கணவனை யிழந்தாள் கடையகத் தாளென்று
அறிவிப்பாயே! அறிவிப்பாயே!

எனப்பொருள் பொதிந்த மொழியொடு விளித்துக் கூறியதில், பாண்டியன் இறைமுறை பிழைத்தோனுயினதும், தான் சிலம்பு காரணமாக கணவனை யிழந்ததும், ‘கணவனை இழந் தோர்க்குக் காட்டுவது இல்லென்று’ சுட்டிக் காட்ட தான் கடையகத் தாளென்று தன் துயரத்தைக் குறிப்பித்ததும் கண்டு கண்டு கொள்ளும்படிச் செய்த இளங்கோவின் சொல் லாற்றல் வியத்தற்பாலது.

மற்றும் மன்னன், கண்ணகியை நோக்கி நீரொழுகுங் கண்ணேடு என் முன் வந்தோய்! நீயார்?‘ என வினவ, மணி மொழிச் செல்வியாகிய கண்ணகி,

‘தேரா மன்னு செப்புவதுடையேன்
எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்ப
புள்ளுறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்
வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சு சுடத்தான் தன்
அரும் பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும் பெயர்ப் புகாரென்பதியே, அவ்வூர்
ஏசாச் சிறப்பின் இசை விளங்கு பெருங்குடி
மாசாத்து வாணிகன் மகனையாகி
வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்பச்
சூழ் கழல் மன்னு நின் னகர்ப் புகுந்தீங்கு
என் காற் சிலம்பு பகர்தல் வேண்டி நின்பாற்
கொலைக் களப்பட்ட கோவலன் மனைவி
கண்ணகி யென்ப தென் பெயரே!

என எடுத்தல், படுத்தல் என்ற ஓசை வேறுபாட்டுடன் மாசிலா விடை யிறுத்ததும் நோக்குழி, கண்ணகியின் செவ்விய சிலவாய சொற்கள் பொருட் கரு நிரம்பி, சீரிய அறமும்

வன்மை சிறந்த கருத்தும், வெல்லும் இனிமையுங் கொண்டு யாவரும் உளங்கொள ஏற்கும் வகையில் மிகு வளம் படுக்கும் ஆற்றல் வாய்ந்தவை என்பது நவில்தொறும் நயங் கண்டார்க்குப் புலப்படும். காப்பியம் எந்த நோக்கங்களுடன் தொடங்கினதென்பதும் (இறை முறை தவறியது, ஊழ்வினை உருத்தி வருவது) இவ் விடை முகத்தால் தனக்கேயுரிய புலமைக் கலையின் முறையோடு இளங்கோ மாண்புற உணர்த்தி வைத்தது நன்கு புலனாகுதல் காண்க. சோழனின் செங்கோலாட்சியினை சிறப்பித்துக் குறிப்பால் பாண்டியனது கொடுங்கோலாட்சியினைப்பற்றிக் கூறுமற் கூறியதும், தங் கணவர் மிகுவளங் கொழிக்கும் பெருங்குடி வணிகப் பெருமகனாரென்றதில், அவர் 'கள்வரல்லர்' எனக் குறிப்பித்ததும், தன் ஒற்றைக் காற் சிலம்பை உலந்த பொருளீட்டவுளங் கொண்டு விற்பதற்குரிய உரிமையோடு மதுரை போந்த தங் கணவரைப் பொய்க் குற்றஞ் சாட்டிக் கொலை புரிதல் கொடுங் கோன்மையெனக் கண்ணகி தன் கருத்தை மறுக்கவும் மறைக்கவும் முடியாதபடி நிலை நிறுத்தியதும், மிக்க வினாக்கள் எழாது தொக்க விடை நயம்பட பகர்ந்து, பாண்டியன் வாய் வாளாமையைக் கொள்ளும்படிச் செய்ததும், சிந்திக்கின், இளங்கோ தன் புலமைக் கலைநலத்தால் கருதும் சொற்செல்வம் யாதென்பதை நுண்ணிதிற் றெளிந்து கொள்ளப்படும்.

தென்னன்கோமான் தன் தவறுணர்ந்து மயங்கி அரியணையில் உயிரிழந்துவீழ, பெருங்கோப்பெண்டும் ஒருங்குடன் மாய்ந்ததை இளங்கோ உளங்கவரு மாற்றான் 'தன்னுயிர் கொண்டு அவனுயிர் தேடினள்' என்று பொருள் விரிய சுருங்கச் சொல்லுங் குறிப்போடு உணர்த்திய ஒண்மை சிந்தைக்கு விருந்தாகிறது. இதனில் காதற்றலைவி தன்னுயிரைக் கருவியாகக் கொண்டு காதலனையே நாடிச்செல்லுந் தலையாய் கற்பின் சிறப்பினையும், பதைப்பேதுமின்றி பெருங் கோப் பெண்டின் உயிர், உடலம்விட்டு இயல்பாகவே பிரிந்து காவலனுயிரைத் தேடுவதை, காணுதற்கரியதாய உருவற்றவுயிருக்கு உருவமைத்து, உணர்வுவழி காட்சி நல்கிய தகைமையினையும், இளங்கோ செறிவுடன் செம்மைபடச் செப்பியது நம்மனோரை துன்ப வெள்ளத்தில் அழுத்தாது நமதறிவை கற்பனையுருவினிலே மயக்கி உள்ளத்தினையும் கலங்கச் செய்யும் பான்மையது. மற்றும், அத்தகைய கற்பனையிலே உண்மையும் அழகும் இழைந்து நிற்க, சிறு சொற்றொடர்களின் மூலம், தாக்கும் வெய்யிலின் கடுமைத் துன்பமதிலே இன்ப

மூட்டியும் விடுகிறார். வேனிற்காலத்து இறுதியில் வெய்யில் பன் மடங்கு மிகுந்து பின் மறைவது போன்று வேனிலென்னும் பறவை வேந்தனும் கடைமுறையாகக் காய்ந்து அழலை மூட்டி நாட்டை விட்டு வேற்று புலம் செல்ல பறக்கும் நிலையை இளங்கோ,

'கோடையோடு புகுந்து கூடலாண்ட
வேனில் வேந்தன் வேற்று புலம் படர
ஓசனிக்கின்ற உறுவெயிற் கடைநாள்'

என ஓசை நலனும் கருத்து நலனும் பாவிடை பதித்துவைத்த கற்பனைப் புலமை. கவின்மிகு சொற்செல்வமேயென்க.

கோவலன் கொலையுண்ட செய்தியை விரைவில் தெரிவிக்க வந்த ஆயப்பெண், தான் கூறவந்த சொற்கள் நெஞ்சிலே அடைபட்டுப் போனதை உணர்த்த வேண்டி, அஞ்சொல் நுண் தேர்ச்சிப் புலமையராய இளங்கோ,

'அவள் தான்
சொல்லாடாள் சொல்லா டாள் நின்றாள்'

என இருமுறை "சொல்லாடாள் என்ற சொல்லைக் கூறியதன் மூலம். அவளது நாவெழா நிற்கும் சொல்லமாட்டாமையால் தளர்ந்த துயரத்தையும் குறிப்பித்து. சொல்ல முடியாதது தன் உள்ளத்திலும் எழுகிறதென சோர்ந்தும் காட்டியுள்ளார். கண்ணகியின் துயருறு நிலையை நம்முன் புலப்படுத்த, இளங்கோ

'கம்பலை மாக்கள் கணவனைத் தாங்காட்டச்
செம் பொற் கொடியனையாள் கண்டாளைத்
தான் காணான்
கண்டாள், அவன் தன்னைக் காணக்கடுந் துயரம்'

என 'இவள் கண்டாள் அவன் காணவில்லை' யென வேற்றுமை புலப்படுத்தி ஆண்ட திறம். துன்பவுணர்வை எழுப்பி மனதை இளகச் செய்து கண்களிலே நீரை வருவித்துப் பெருகவைக்கும் நீர்மையது. மற்றும் கற்புக் கடமையினையே பேணிய கண்ணகி கூற்றாக

'கீழ்த்திசை வாயிற் கணவனோடு புகுந்தேன்
மேற்றிசை வாயில் வறியேன் பெயர்கென'

இளங்கோ இயம்பிய விடத்துக் காப்பிய அவலச் சுவை சொல் லொணு உச்சநிலை யெய்தியது அவர் தம் புலமைப் படைப்பின் அற்புதத்தையும் ஆற்றலையும் குறிக்குமென்க. நிகழக்கூடாதது நிகழ்வுற்றதென குடிமக்கள் பேசுவதை மதுரை மக்கள் கூற்றில்

'களையாத துன்பம் இக்காரிகைக்குக் காட்டி
வளையாத செங்கோல் வளைந்தது'

என வைத்து இளங்கோ இயம்பியது, சிந்தனைக்கே அனை வரையும் அழைத்தேகும் அருமையுடைத்து. விரிந்த கருத்துக் களைச் சுருங்கிய சொற்களால் ஒரு சிறு அடிகளில் விளக்குமாறு சிலப்பதிகாரக் கதையின் உயிர் நிலையினை 'மாதவி மடந்தை கானற் பாணி கனக விசயர் தம் முடித்தலை நெரித்தது' என அழகுற இளங்கோ மாடலன் வாய்ச் சொல்லாகக் கூறி, மாதவி கடற்கரையில் பாடிய பாடல் காரணமாக கோவலன் பிரிந்த மையின், அதன்பின் ஒன்றன்பின் ஒன்ருக தொடர்புபட ஏற் பட்ட நிகழ்ச்சிகளையும் நினைவுக்குக் கொண்டு வந்தது. இவரது நாவன்மையும், புலமைச் சொற் செல்வமும் எத்தகையவாறு இழுமென் மொழியிலே விழுமியது பயந்து நெஞ்சினையள்ளும் எளிமையும் ஆற்றலுமுடைய தென்பதும் வியந்தொறும் வியந் தொறும் வியப் பிறந்தன்றே.

கற்குந்தோறும் சொற் பொருணுட்பங்களும் மொழிச் செவ் வியும் எதிர்ந்தினிக்க, நல்லிசைப் பாக்களை இயற்றிய பேரறிவுச் சான்றேரான இளங்கோ, கற்ருேர்க்குங் கற்பார்க்கும் இனிமை யும் உறுதியும் பயக்கும் தெளிவாய தமிழ் உரை நடையினை, பொருட் சிறப்பின் முதன்மை கருதி உள்ளங்குளிர மகிழ்ந் திசைப்பாராயினர். தமிழின் தூய்மையினைப் பேணி இவரது 'உரைப்பாட்டு மடை' தக்க சொற்களை ஏற்கத் தக்க இடத்தில் அமையுமாறு செவ்விய சாயலோடு உள்ளத்தே தெளிவுங் கனி வும் மிகயாளும் ஆற்ெருழுக்குப் போக்கினைக் கொண்ட நடை யாதலின், அஃது யாப்பினின்று விடுபட்டு நுண்ணிய ஒலி வேற்றுமைகளோடு தாளக்கட்டுடன் இணைந்த இசை நெறிச் சுவட்டைப் பின் பற்றுவதாய கலைப் படைப்பினை உடையது. கவிதை இலக்கியத்திலிருந்து பெறப்பட்ட இவரது உரை நடை உணர்வழகோடு கதைப் போக்கை விளக்கும் வகையில் மாட்சி மைப்பட்ட தென்பது ஆய்ச்சியர் குரவையிலும் வாழ்த்துக் காதையிலும் சிறப்பாக அறியப்படும். இதனுன் இவரைப் பொருள் வழிச் சொற்பரந்து கனியும் தமிழ் உரை நடையின் தந்தை

யெனில் அது விந்தையாகாது; மற்றும் அவர் பிற்காலக் கட்டுரை நடைக்கு முன்னேடியாக நின்று காற்கோலினுரெனினும் அது மிகையாகாது.

நுண்ணுணர்வுமிக்க இளங்கோவுக்குத் தாங் கற்ற கல்வியறிவும், கற்றதனுலாய பெரும் பயனும் அவரது வாழ்வின் சிறப்பு நலமாக அமைந்து மாட்சிமை யெய்தி புலமையுமாதல் அவர் தம் கற்பக மனைய காப்பியத்தில் நன்கனம் காணலாகும். அவரது காலத்தில் முன் நிகழ்ந்த சொற் பொருள் வளமிக்க சிறந்த பல இலக்கியங்களை நன்குஆய்ந்து அவற்றின் சுவைகளைத் துய்த்த திறன், அவரது கற்பனை ஓட்டத்தைக் காவியத்தில் மிகுதியாய் விரையச் செய்ய உதவி புரிந்து, அவ்விலக்கியங்களை நாம் நினைந்து மகிழ்ந்து இன்புறும் வகையும் நல்கியது. கற்பனைக்குத் தக உருக் கொடுப்பதுதான் கலை காணும் உண்மையென்பது; மெய்வகை யுணர்ந்த இளங்கோவின் சீரிய கருத்தாகும். நூலறி புலமையால், இளங்கோ காப்பியத்தின் கண் உருக்கம், எழுச்சி மலர்ச்சி முதலாய உள்ள நெகிழ்ச்சிகளைத் தோன்றச் செய்து. உயர்ந்த ஒழுக்க முறைகளோடு ஒன்பான் சுவையும் திகழ, புலமைப் பேரின்பம் பெறும் உண்மையினைப் புலப்படுத்து வாராயினர். மற்றும் சொற் பொருளின்பத் தோடமையாது ஆடல் பாடல் இன்பத்தையும் அழகுணர்ச்சி நலனையும் வியக்கும் முறையில் தம் இயலறிவோடு கூடிய நூலறிவின் திறத்தால் காப்பியத்தை இளங்கோ அமைத்து, தாமின்புற்று அதனை இவ்வையத்துள்ளாரும் நுகரவேண்டுமென்றும் காமுறுவராயினர், வாழுமுயிர்களது உள்ள மனத்தையும் அளந்தறிந்து வாழ்க்கையின் துறைகளனைத்தும் ஆழ்ந்தாய்ந்து பயன்மிகக் கொண்ட வள்ளுவரின் பெரும் புலமையினை வியந்து, ஏற்றம் தரும் அவரது கருத்துக்களையும் பொருட் சிறப்பு விரவிய சொல்லாட்சிகளையும் தழுவி, தமது காப்பியத்தில் மிகப் பலவாக நயம்பெற தக்க இடத்தில் தகுந்த முறையில் அமைத்துள்ளார். காப்பியம் விளக்கும், அரசியல் நெறி தவறிய மன்னனை அறம் ஒறுக்கு மென்பதும், மாசிலா கற்புடைய பெண்டிரை வானேக்கி வாழும் உலகெல்லாம் வணங்குமென்பதும், ஊழ்வினை உருத்து வந்து ஊட்டுமென்பதுமாய உண்மைநுண்பொருள்கள்

(1) வெருவந்த செய்தொழுகும் வெங்கோலனயின்
ஒருவந்தம் ஒல்லைக்கெடும்.

(3) பெற்ருற்பெறின் பெறுவர் பெண்டிர் பெருஞ் சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு

(3) ஊழிற் பெருவலியாவுள மற்ருென்று
சூழினுந்தான் முந்துறும்

என்ற செய்ய பொய்யா மொழிகள் மூன்றினும் அடங்குதல் காண்க.

மேலும். ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியர் நுவன்ற வாறு, முதல் கரு உரிப் பொருள்களை, இளங்கோ, ஏதுவும் பயனுமாய் தம் காவியத்தில் இழையயாத்து, பொருளிலக்கண வல்லார் வியக்கும் வண்ணம் தமிழ் மணங் கமழும் தீஞ்சுவை யினைப் பயக்கச் செய்தார். இச்சிறந்த பொருளிலக்கண அமைப்பின் வழி, தொல்காப்பியர் கூறும் அமைதியையும் பொலி வையும் அடிப்படையாகக் கொண்டு, தாம் எடுத்துக் கூறவந்த காப்பியக் கருத்துக்களை இலக்கண விதிக்குட்பட்டு சீரிய நடை நலத்தோடும் புலமைக் கலையால் திட்ப நுட்ப அருமைகளோடும் ஆழ அகழ உரைப்பாராயினர். தொல்காப்பியர் மொழிப்படி, இளங்கோ தம் வளங்கெழு புலமையோடு

செல்வம் புலனே புணர்வு விளையாட்டுடன்
அல்லல் நீத்த உவகை நான்கினையும்

புகார் காண்டத்திலும்,

இளிவே யிழவே அசைவே வறுமையென
விளிவில் கொள்கை யழுகை நான்கினையும்

மதுரைக் காண்டத்திலும்,

கல்வி தறுகண் இசைமை கொடையெனச்
சொல்லப்பட்ட பெருமித நான்கினையும்

வஞ்சி காண்டத்திலும் ஆண்டமைத்துக் காப்பியச் சுவை திகழு மாறு பொருளிலக்கணத்தின் மெய்ப்பொருள் நுட்பத்தினைப் பொலியவும் செய்தார்.

தனக்கேயன்றிப் பிறர்க்கும் பயன்பட வாழ்வாங்கு வாழும் வகையும், யாண்டும் நலமே காணும் பெற்றிமையும், மெய்ஞ் ஞானப் புலமை நிலையினின்று சொற்றெளிவால் புலப்படுத்தும்

காப்பியவேந்தர், துன்பம் விரவிய உலக வாழ்க்கையினின்றும் துன்பத்தை நீக்குதல் அரிதென்றும். இன்னலும் இடுக்கணும் உற்றபோது மனத்தை அலையாமலும் அழியாமலும் முயற்சியீடு பாட்டில் முனையச் செய்ய வேண்டுமென்றும்,

பிரிதல் துன்பமும் புணர்தல் துன்பமும்
உருவிலாளன் ஒறுக்குந் துன்பமும்
புரிகுழன் மாதர்ப் புணர்ந்தோர்க் கல்லது
ஒரு தனி வாழ்க்கை உரவோர்க்கில்லை

என இன்னுரையோடும் இயலுரையோடும் இசையுற வழுவில வாகப் புகன்று, நல்வாழ்க்கைக்கு வேண்டிய தீது செறுக்கும் அறிவுரை மூலம்

'பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்
தெய்வந் தெளிமின், தெளிந்தோர்ப்பேணுமின்
பொய்யுரை அஞ்சுமின், புறஞ்சொற் போற்றுமின்
ஊனூண் துறமின், உயிர்க் கொலை நீங்குமின்
தானஞ் செய்ம்மின், தவம்பல தாங்குமின்
செய்ந்நன்றி கொல்லன்மின், தீ நட்பிகழ்மின்
பொய்க்கரிபோகன்மின், பொருண் மொழி நீங்கன்மின்
அறவோரவைக்களம் அகலா தணுகுமின்
பிறவோரவைக் களம் பிழைத்துப் பெயர்மின்
பிறர்மனை அஞ்சுமின், பிழையுயிர் ஓம்புமின்
அறமனை காமின், அல்லவை கடிமின்
கள்ளுங் களவுங் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்
இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா
உளநாள் வரையாது ஒல்லுவ தொழியாது
செல்லுந் தேஎத்துக் குறுதுணை தேடுமின்
மல்லன் மாஞாலத்து வாழ்வீரீங்கென'

மக்களை முதிர்ந்த அன்பும் உயர்ந்த அறனுங்கொண்டு நன் னெறியில் மாண்புற தம் புலமை நலத்தால் நிலைக்கச் செய்தார்.

செஞ்சொற் செல்வப் புலமையால் இளங்கோ காப்பியச் செய்யுளெனும் தம் ஞானச் செங்கோலின் வழி, வாழும் மக்களை

ஒழுக்க நெறியினின்றும் இழுக்குருவண்ணம் தம்முளே அடக்கி யாளும் புலமைச் சொற் பழக்கத்தில் ஆற்றலும் ஆண்மையும் எய்தி சொல்லின் வகை தெரிந்து திகழ்ந்தது கண்ணகி காப்பியக் கதைக்கு ஒரு பெருஞ் சிறப்பெனக் கருதற்பாலது. மற்றும். சொல்வன்மை தெய்வ மணப்பாங்கு கொண்ட ஓர் வளவிய செல்வமென்றும் அஃதுடையார்க்கு உலகம் வயமாதலை, இக் காப்பியம் உணர்த்திற்று. பழுதற்ற முத்தமிழ்த் துறையின் முறை போகிய இளங்கோ, ஒரு தனி துறவற வாழ்க்கையழகில் இறை நிலை மருவ இதயத்தைப் பறிகொடுத்து நல்லொழுக்கம் ஓம்பும் தம் புலமைச் செல்வத்தால் தூய காதலினும் கலையினும் வையக வாழ்வும் சமுதாயமும் பண்பாடுற்று வளம்பட யமையுமாறு இயற்றிய சிலப்பதிகாரம், சொல்லருமை மாட்சி நலனும். பொருளுடை பல்கலைத் திறங்களும் பேருண்மை நெறிகளும் எழிலுறச் செறிந்த வித்தகக் காப்பிய நுட்பமு முடையதாய், புலவர் தம்மையும் விழிப்புறுத்திச் செம்பொருளைக் காட்டிச் செல்லும் பெரும் பயனையும் எய்துவிக்கின்றதென்பது வெள்ளிடைமலை,

* * *

பொழிலன்பர்கள் சுவைக்க

இயற்கைமொழி.

"தமிழ் இயற்கைமொழி, அதன் இலக்கணம் இயற்கைக் கட்டுப்பாடுகளுக்கு முரண்படாமல் அமைந்திருக்கிறது, அதனால் தமிழ் அழிவுறாது"

—பா. வே. மாணிக்க நாயக்கர்.
(1925 பொ. து, - 1, பக்-50).

கூத்தன் பிறந்த ஊர்.

(மணக்குடி.)

பேராசிரியர் திரு. சி. கோவிந்தராசனுர், கரந்தை.

தஞ்சை மாவட்டத்திலுள்ள திருத்துறைப்பூண்டியிலிருந்து நேர் கிழக்கே கடற்கரையில் அமைந்துள்ள தலைஞாயிறு என்னும் ஊர் வரையில் செல்லும் நெடுஞ்சாலையில், அரிச்சந்திர னுற்றின் தென் கரையில் அமைந்திருப்பது மணக்குடியாகும். என்னுடைய வரலாற்ருராய்ச்சிக்குரியதாக கி. பி. 1965இல் இவ்வூர் அமைந்தது. ஊரின் பல பகுதிகளையும் யான் நன்கு ஆராய்ச்சி செய்தபோது, இவ்வூர் ஒரு காலத்தில் பேரூராகச் சிறந்திருந்து, காலத்தின் கோலத்தால் அழிந்து இன்றுள்ள வடிவினைப் பெற்றுள்ளது என்பது புலனுயிற்று. ஊரின் கிழக்குப் பகுதியில் பழமையான சிவன் கோயிலொன்று உள்ளது. இக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவன் தான்தோன்றீசுவரர் என்னும் பெயருடன் விளங்குகின்ருர். தோரண வாயிலுடன் கூடிய ஒரே திருச்சுற்றுடன் இக்கோயில் கருவறை, முகமண்டபம், பெரு மண்டபம் ஆகிய பகுதிகளுடன் அமைந்துள்ளது. வடக்குத் திருச்சுற்றிடத்தில் உலகநாயகி அம்மன் கோவிலும் இடம் பெற்றுளது;

இக்கோயிலிலுள்ள உலோகத் திருமேனிகளுள், அப்பரடிகளின் படிமம் ஓரடி உயர அளவில் அழகிய வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. பழமையான புத்தர் சிலைகளில் உச்சித் தலையில் ஒரு முகடு தோற்றமளிக்கும். அதனை ஞான ஒளியின் சின்னமென்பர். சிலையை உருவாக்க முயன்ற சிற்பி, அப்பரின் வரலாற்றினையே உருவாக்கியுள்ளான் போலும்! உச்சித்தலை முகடு, அப்பர் தருமசேனரெனும் சிறப்புப் பெயருடன் சமண சமயத்தில் ஞானமும் யோகமும் பொருந்த உயர்ந்திருந்ததை நினைவுறுத்தவும், அச்சமயத்தை விட்டுச் சைவ நலத்துடன் தாழ்வடமும் கண்டிகையும் திருநீறுமாகத் திகழ்ந்ததைப் பிற அணிகலன்கள் விளக்கவும் இச்சிலை அமைக்கப்பட்டுளது கருத்திற்கு விருந்தாகும்.

இக்கோயிலிலுள்ள கல்வெட்டுகளை ஆராய்ந்தபோது, கருவறைகளின் அடிப்படைகளில் பல கல்வெட்டுகள் இருப்பினும்,

அவைகளுள் ஒன்றும் முழு வடிவில் இன்றில்லை. சிதைக்கப்பட்டும் சிதைந்தும் இருக்கின்றன. பெரு மண்டபத்தின் சுவர்ப் பகுதிகளில் பல துண்டுக் கற்கள் கல்வெட்டுகளுடன் இடம் பெற்றுள்ளன. துண்டுக் கல்வெட்டுகளைப் படியெடுத்துப் படித்தறிந்தபோது, ஒரு சில துண்டுகளில் ஒன்றிய தொடர்கள் பொருந்தியிருந்தன. மற்றவைகள் ஒரு சில எழுத்துக்களைக் கொண்ட அளவிலேயே இருந்தன. இந்நிலையினைக் கண்டு சிந்திக்கும்போது, மணக்குடியில் பழமையான கோயிலொன்றிருந்து அழிந்திருக்க வேண்டுமென்பதும். அப்பழைய கோயிலிலிருந்த கல்வெட்டுப் பகுதிகளே இக் கோயில் பெரு மண்டபச் சுவர்களில் இடம் பெற்றுள்ளன என்பதும் புலனாகியது. கல்வெட்டுப் பகுதிகளுள் சில :—

கல்வெட்டு

1, ... ஆவது ராஜேந்திர சோழவள நாட்டு இடையள நாட்டு
... ராஜச்சேனவரையனும் அரயந் நாகமுடிக்கோந் ... ...
... சோழச் சேனவரையனும் அரயந் மேற்த்திசை நின்ற ...
... சோழச் சேனவரையனும் இவ்வனைவோம் இவ்வூர் ...
... புகசோழக்குப் பாவடை யானுக்கும் இவர் தம் ... ...
... இறையிலி செய்து குடுத்த நிலமாவது எங்க ... ...
... ரடந் அநந்தக்குடைய நாந உத்தம .. ..
... உத்தமராம தேவர்க்கு யாண்டு எட்டாவது ... ..

2. ... தெழ வீரஸிம்ஹாஸநத்து முக்கோகிழா ... ...
... ளொடும் வீற்றிருந்தருளிய கோப்பரகே ... ...
... பந்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீவிக்கி ... ...
... ம தேவர்க்கு யாண்டு ஆறாவது. ... ...

3. ... ஸ்வஸ்திஸ்ரீ மணக்குடி திருத் ... ...
... லியூட்ட சந்திராதித்தவல் ... ...
... பௌராணிகன் பொன் குடுத்து ... ...

4. ... நசக்கரவத்திகள் ஸ்ரீ விக்கிரம சோழ தேவர்க்கு ... ...
... நாட்டு மணலிவாகை மணக்குடி உடையார் .. ..
... னின்றுநந ராஜராஜச் சேநாவரையன் மகள் ... ...
... உலகுடையாளைச்ச ... ...

5. ... டைய தேவர்க்கு மணக்குடையான் அருமொழி ... ...
தேவ சேனு வரையன் ... ...

6. ... ராஜேந்திர சோழ வளநாட்டு இடையள நாட்டு... ...
... மணக்குடி ... ...
... கத்த ... இக்கோயில் காணி உடைய சிவப்பிராமணன்.

சிதைந்த நிலையில் கிடைத்துள்ள இக்கல்வெட்டுகளிலும் உயர்ந்த வரலாற்றுச் குறிப்புக்கள் கிடைக்கின்றன.

1. தொல்காப்பியத்திற்கு உரை கண்ட ஆசிரியர்களுள் தமிழுலகம் புகழும் இளம்பூரணரின் வரலாற்றைக் குறிக்கும் பாடலின் தொடராக, "குணகடற் செல்லூர் மணக்குடி புரியான்" என்பது காணப்படுகின்றது. இத்தொடரின் கருத்திற்கேற்ப, சோழநாட்டின் கிழக்கு எல்லையாகும் வங்கக் கடற்கரையைச் சார்ந்துள்ளதும் இன்று தலைஞாயிறு என்று பெயர் பெற்றிருப்பதுமாகிய செல்லூரினைச் சார்ந்து மணக்குடி அமைந்திருக்கின்றது. எனவே, இளம்பூரணர் பிறந்தவூர் இம்மணக்குடியே என்பது தெளிவாகின்றது.

2. திருக்குறளுக்கு உரைகண்ட தமிழ்ப் பெருமக்கள் பதின்மருள் ஒருவரின் பெயர் மணக்குடவர் என்பதாகும். மணக்குடியார் என்பதே மருவு மொழியாகி மணக்குடவர் ஆனதென்று கொள்ளலாகும். கல்வெட்டுகளில் குடிக்கூலி, குடக்கூலியாகத் திரிந்து வந்துள்ளதைப் போன்றே மணக்குடியுடைய உரையாசிரியராகிய மணக்குடியார், மணக்குடவர் ஆயினர் என்பது பொருந்தியதேயாகும்.

3. சேனுவரையரெனும் பட்டமுடன் பலர் மணக்குடியில் வாழ்ந்திருந்தனரென்பதைக் கல்வெட்டுப் பகுதிகள் உணர்த்துகின்றன. சோழர் காலத்திலிருந்து மணக்குடியில் கைக்கோள முதலியார்களே தொடர்ந்து வாழ்ந்துவரும் பழமையைக் கொண்டு சிந்திக்கும்போது. சேனு முதலியார்கள், கைக்கோள முதலிகள், கைக்கோளப்படை, இடங்கைக்கோளப்படை என்றெலாம் சோழர் காலக் கல்வெட்டுகளில் காணப்பெறும் பெயர்கட்குரியவர்களே இச்சேனு முதலியார்கள் என்பது புலனுகின்றது.

இத்தகைய பழமையுடன் அமைந்திருக்கும் மணலிவாகை மணக்குடி, சோழர் காலத்தில் சிறந்திருந்ததைச் சிவன் கோயிலிலுள்ள, விக்கிரமசோழன், இரண்டாம் இராசராசன் ஆகியோரின்

கல்வெட்டுப் பகுதிகள் உணர்த்துகின்றன. கல்வெட்டுகளில், இராசேந்திர சோழவள நாட்டு இடையள நாட்டு மணலிவாகை மணக்குடி என்றும், மணக்குடி என்றும் இவ்வூர் கூறப் பட்டுள்ளது.

உரையாசிரியர்களின் வரலாற்றுராய்ச்சிக்குமுரிய சான்று களுடன் பொருந்திய மணக்குடி, இன்றோர் சிற்றூராகவே காட்சியளிக்கின்றது. எனவே, பழைய மணக்குடியின் அமைப் பினை ஆராய்ச்சி செய்தறிய முற்பட்டபோது, இன்றுள்ள ஊரளவினைத் தொடர்ந்து நில புலன்களாக ஆக்கப்பட்டுள்ள மேற்புறம் முழுவதும் ஒரு காலத்தில் மக்கள் வாழ்ந்திருந்த ஊராக நன்கு தெரியலாயிற்று. இப் பழைய ஊரிற்கு வடக்கு எல்லையில் பிடாரியார் கோயிலும், தெற்கு எல்லையில் ஐயனார் கோயிலும் அமைக்கப்பட்டுள்ளன. அழிந்து கிடந்த ஐயனார் கோயிலை அண்மையில் புதுப்பித்துள்ளனர். சாமளாதேவி எனும் பெயருடன் உள்ள பிடாரியார் கோயில் சிதைந்து தரை மட்ட அளவில் கிடக்கின்றது. பரிவாரத் தெய்வ கோட்டங் களுடன் கூடிய இரண்டு திருச்சுற்று மதில்களுடன், கருவறை, முன் மண்டபம், பெருமண்டபம் ஆகிய பகுதிகளுடன் வடக்கு நோக்கிய திருவாயிலும், வாயிலைச்சார்ந்து திருக்குளமும் பொருந்திய நிலையில், சோழர் காலச் செங்கல் திருப்பணியாகத் திகழ்ந்திருந்த இக்கோயிலின் பரப்பினை, தரைமட்டத்தில் நான்கடி அளவில் அகலமாகத் தொடரும் அடிப்படைப் பகுதிகளைக் கொண்டு அளவிட்டு அறிய முடிந்தது. பழைய ஊரிருந்த பகுதிக்குத் தென்மேற்காக இன்றுள்ள பயித்தந் திடலில் முதுமக்கள் தாழிகள் கிடைத்துள்ளமை ஊரின் பழமைக் குரிய சான்றுகளிலொன்றாகும்.

செங்குந்த முதலியார்களெனும் கைக்கோள முதலியார்களின் வாழ்விடமாகவே சோழர் காலத்திலிருந்து வருகின்ற இவ்வூரின் கிழக்குத் தெருவின் இடையே, ஒரு தாழ்ந்த வீடுளது. அதன் பிற்பகுதி வெற்றிடமாக இன்று இருப்பினும், ஒரு காலத்தில் சுற்றுக்கட்டு வீடாக இருந்திருப்பதற்குரிய சுவடுகளுடன் இன்றுள்ள முற்பகுதி எடுத்துக்காட்டுகின்றது.

இம்மனையிலேதான், விக்கிரம சோழன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன் ஆகிய முப்பெரும் சோழமன்னரின் ஆட்சிக்காலங்களிலும் தொடர்ந்து தமிழ்ப் புலமையால் புகழ் நிறுவி வாழ்ந்திருந்து, மூவர் உலா, தக்க யாகப்பரணி, ஈட்டியெழுபது, குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ்,

காங்கேயன் நாலாயிரக் கோவை ஆகிய அருந்தமிழ் நூல்களைச் செய்து, கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டுக்குரிய வாழ் நாளுடையாராகத் திகழ்ந்திருந்த ஒட்டக்கூத்த முதலியார் பிறந்தார் என்று ஊரிலுள்ள கைக்கோள முதலியார்கள் அனைவரும் சுற்றத்தொடர்புடன் கூறுகின்றார்கள். இது ஒருபுற மிருக்க, கூத்தரவர்கள் பிறந்த ஊரைக் குறிப்பிடும் தண்டியலங் கார மேற்கோள் செய்யுளொன்று

"சென்று செவியளக்குஞ் செம்மையவாய்ச் சிந்தையுள்ளே
நின்றளவி லின்பம் நிறைப்பவற்றுள் — ஒன்று,
மலரிவருங் கூந்தலார் மாதர்நோக் கொன்று
மலரிவருங் கூத்தன்றன் வாக்கு."

இவ்வாறு, கூத்தன் பிறந்தவூர் "மலரி" என்று கூறுகின்றது.

கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் செங்குந்தரெனும் கைக் கோள முதலியார் மரபினர் என்பதை, அவரால் செய்யப் பட்டுள்ள ஈட்டியெழுபது என்னும் நூல் உணர்த்துகின்றது. அம்மரபினர்களே இம்மனை எங்கள் முன்னோர்களில் ஒருவராகிய புலவர் கூத்த முதலியாரின் மனையிதுவாகுமென்று உரிமையுடன் கூறுகின்றார்கள். ஆனால் தண்டியலங்கார மேற்கோள் செய் யுளில், கூத்தன் பிறந்தவூர் 'மலரி' என்று கூறப்பட்டுள்ளது. இவற்றை நடுநிலைமையோடு ஆராய்ந்து முடிவு செய்வோ மானால் மலரி என்ற ஊர்ப்பெயரே, மணலி என்றும் மணக்குடி யென்றும் ஆகியுள்ளதென்று கொள்ளத் தகுவதாகும். எனவே, கூத்தமுதலியாராகிய ஒட்டக் கூத்தர் மலரியாகிய மணக்குடியிற் பிறந்தவரென்பதற்கு ஏற்ற சான்றுகள் வேண்டும்!

1. கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தமுதலியார் பிறந்த மனை மணக்குடியில் கிழக்குத் தெருவில் உள்ளது.

2. கூத்த முதலியார் கைக்கோள மரபினர். மணக்குடியில் தொன்றுதொட்டு வாழ்பவர் யாவரும் பரம்பரையாக வரும் கைக்கோள முதலியார்களேயாவர். அவர்கள் கூத்தரைத் தங்கள் முன்னோருள் ஒருவர் என்று உரிமை யுடன் கூறுகின்றார்கள்.

3. கூத்தர் பிறந்து வாழ்ந்த மனைக்கு இன்றும் 'ஒட்டக் கூத்தர் மனை' என்றே ஊரார்கள் சுட்டிக் கூறு கின்றார்கள்.

4. அம்மனையில் ஒட்டக்கூத்தரின் வழிவரும் குடும்பத்தினர் இன்றும் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்கள் தலைமுறைக்கு ஒரு ஆண் பிள்ளைக்கு ஒட்டக்கூத்தன் என்று பெயரிட்டு வருகின்றார்கள். இம் முறையில் இன்றைய தலைமுறைக்குரிய ஒட்டக்கூத்த முதலியார் வாழ்ந்து வருகின்றார்.

5. இன்றுள்ள ஒட்டக்கூத்த முதலியாரும், ஊரிலுள்ள கைக்கோள முதலியார்களும் கவிச் சக்கரவர்த்தியின் வாழையடி வாழையாகவரும் சுற்றமென்றே கூறுகின் றார்கள். தலைமுறைக்கு ஒருவராகப் பெயரிட்டுவரும் ஒட்டக்கூத்தருள் சிலர் புலமையும் தெய்வநலனும் செல்வ வளனும் பெற்றவர்களாகத் திகழ்ந்திருந்த கதைகளை இவர்கள் விரிவாகக் கூறுகின்றனர். இத்தகைய செய்திகளைச் செவிவழிச் செய்தி என்று தள்ளமுடியுமா? மரபுவழிச் செய்தியாக வல்லவோ இருக்கின்றது! மற்றும்,

6. கவிச்சக்கரவர்த்தி கூத்தர் சாமளை என்னும் சக்திவழி பாட்டினர் என்பதை தக்கயாகப் பரணியால் உணர லாகும், மணக்குடியில் சோழர் காலத்தில் உண்டான சக்தி கோயிலே, பழைய மணக்குடியின் வடக்கு எல்லையில் அழிந்து கிடக்கும் பிடாரிகோயிலாகும் கூத்தரால் வழிபாடு செய்யப்பெற்ற தேவி, இன்று கூரைக் கொட்டகையுள் தரையில் அமர்ந்திருப்பினும் 'சாமளாதேவி' என்ற பெயருடனேயே இருக்கின்றார்.

7. சாமளாதேவிக்கு ஒட்டக்கூத்தர் புத்தாண்டு நாளில் 'பெரும்படையல்' என்ற பெயரால் சிறப்பு வழிபாடு நிகழ்த்தியுள்ளார். அவர் வழிவரும் முதலியார்கள் தொடர்ந்து இன்றளவும் அவ்வழிபாட்டினைத் தமிழ்ப்

புத்தாண்டு நாளில் நிகழ்த்திவருகின்றார்கள். (கூத்தர் பெருஞ்சோற்றுப் படையலிட்ட இடம், சிதைந்து கிடக்கும் பிடாரியார் கோயிலின் தென்மேற்கு மூலையில், திருக்குளத்தின் கரையில் இன்றும் இருப்பதைக் காணலாகும்.)

8. யாமள சாத்திரத்துள் கூறப்பெறும் சாமளாதேவி வழிபாடு வடமொழிப் புலமையும் பெற்றிருந்த கூத்தரால் நிகழ்த்தப் பெற்றிருந்ததால், அவரை நன்கு மதித்துப் போற்றிய சோழமன்னரும் தமது ஆட்சியில் சாமளா தேவிக்குப் பல இடங்களில் கோயிலெடுத்துள்ளன ரென்று தெரிகின்றது.

9. பிடாரியார் கோயிலென்றும், சாமளாதேவி கோயி லென்றும் கூறப்பெறும் ஒட்டக்கூத்தர் வழிபட்ட சக்தி கோயில் சோழர் காலத்தில் செங்கல் திருப்பணியாகவே அமைந்திருக்கின்றது. செங்கற்கள், அளவில் பெரிய தாகவும், நிறமும் திண்மையும் பொருந்தியதாகவும் உள்ளன. கற்களைப்பற்றிப் பழம்பொருள் ஆராய்ச்சிக் கண்ணோட்டத்துடன் கூறும்போது, இக்கோயில் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றி யிருக்கவேண்டுமென்பது திட்டமாகத் தெரிகின்றது.

இதுவரையில் யான் கண்டதும் கேட்டதுமாகிய சான்றுகளைக் கொண்டு எடுத்துக்காட்டி விளக்கியுள்ள மணக்குடியே ஒட்டக்கூத்தர் பிறந்த ஊரென்பதும், அதனையே தண்டியலங்கார மேற்கோள்செய்யுள் 'மலரி' என்று குறிப்பிடு கின்றதென்பதும் தெளிவாகும் மணக்குடியில் தொல்காப்பியத் திற்கு உரைகண்ட இளம்பூரணரும், மணக்குடவரும், சேனா வரையர்களும் பிறந்து புகழ் பெருக்கியுள்ளார்களென்றால் இம் மணக்குடி தமிழ் மணக்குடியாக அன்று விளங்கி நின்ற மேன்மை, வரலாற்றுப் புதுமைப் பெறுவதாகும்.

சென்ற இதழ்த் தொடர்ச்சி.

இருங்கோவேளும் நற்குடி வேளாளரும்

(இரு தமிழ்க் குலத்தோரின் தொன்மை, தோற்றம் பற்றிய சில கருத்துக்கள்)

திரு. பி. இராமநாதன், பி. ஏ., பி. எல்.,

[இலண்டன் பல்கலைக் கழகத்தின் "ஆசிய, ஆப்பிரிக்கப் படிப்புக்கள் பள்ளியின் தாளிகை" தொகுதி 32 பகுதி-2இல் 1969 சூன் திங்கள்) பக்கங்கள் 323 — 343-இல் வெளிவந்த ஆங்கிலக் கட்டுரையின் தமிழாக்கம்]

அதன்பிறகு சித்திரபானு ஆண்டு சித்திரைத்திங்கள் 7ஆம் நாள் திருவழுதிவள நாட்டில் (தற்காலம் ஸ்ரீவைகுண்டம் என்றழைக்கப்படும்) கைலாசபுரத்தில் ஒரு கோட்டையில் ஒரு கட்சியினரைக் குடியேற்றினன்; மற்றொரு கட்சியினரை அம்பாசமுத்திரம் வட்டத்தில் வீரவநல்லூரிலிருந்து சில கல் தொலைவில் உள்ள அத்தாளநல்லூரில் ஒரு கோட்டையில் குடியேற்றினன். இருங்கோவேள் பட்டம் வழங்கப்பட்ட சாதித் தலைவர் அத்தாளநல்லூர் சென்றார். அவர் தம்பி ஸ்ரீவைகுண்டம் சென்றார். (பட்டத்து இருங்கோவேள் தம்பியர் வழக்கமாகச் சின்னப் பிள்ளை என்றழைக்கப்படுவர்) காலஞ் செல்லச் செல்ல இரு பிரிவினரும் தம்முள் மணவினை தவிர்ந்த இரு தனித் தனிச் சாதியினராயினர். ஸ்ரீவைகுண்டத்தில் தங்கியோர் அங்கேயே நிலைத்தனர்[28] அவர்கள் அங்கு கோட்டை வேளாளர்[29] அல்லது கோட்டைப் பிள்ளைமார் என்ற பெயரில் இன்றும்

28. கி. பி. 1422 முதல் 62 வரை ஆண்ட அரிகேசரி பராக்கிரம பாண்டியனோடு கூட ஆட்சி செய்தவனும் தென்காசிக் கோயிலைக் கட்டியவனும் ஆன வீரபாண்டியனின் காலத்திய சகம் 1363ஆம் ஆண்டு (கி பி. 1441) கல்வெட்டு ஒன்று ஸ்ரீவைகுண்டத்தில் கைலாசபதி கோயிலின் கருவறையின் வடக்குச் சுவரின்மேல்காணப்படுகிறது. (அது 1895ஆம் ஆண்டுக் கல்வெட்டாராய்ச்சி அறிக்கையின் 172ஆம் எண்ணுள்ள கல்வெட்டாகும்; பின்னர் "தென்னிந்தியக்கல்வெட்டுகள்" 5ஆம் தொகுதியின பககங்கள் 314 – 15இல் 736ஆம் எண்ணுள்ள கல்வெட்டாகி வெளியிடப்பெற்றது.) அக்கல்வெட்டில் அக்கோயிலுக்குத் தானம்

காணப்படுகின்றனர். அவர்களால் கோட்டை என்று அழைக்கப்படும் உயர்ந்த மண் சுவர் மதில்களுக்குள் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் கோட்டையையும் பழக்க வழக்கங்களையும் பற்றிப் பின்னர் கூறப்படும்.

19 "இச்சாதியார் இடம் பெயர்ந்து குடியேறுகையில் இராக்காலங்களிலேயே பயணம் செய்தல் வழக்கமாம். அத்தாள நல்லூரில் [30] குடியேறியோர் விசயபூபதி இருங்கோவின் காலத்தில் கி. பி. 1227இல் அவ்வூரை விட்டு ஏகி இரவில் பயணம் செய்து செவலைக்குச் சென்று அங்கிருந்த வல்லம்பரைப் பாலய நாட்டிற்கு ஓட்டிவிட்டுச் செவலையிற் குடியேறினர். அவ்வட்டாரத்தில் ஆண்டுவந்த வெட்டு மாறன் என்னும் பாண்டியகுலச்

தந்தவர்களில் ஒருவனுகச் "செழுவனூர்ப் பிறவிக்கு நல்லான் பொன்னப் பிள்ளை" குறிப்பிடப்படுகிருன். அவ்வீர பாண்டியனின் 15ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்று அக்கருவறையின் முன்னுள்ள மண்டபத்தின் வடக்குச் சுவரில் காணப்படுகிறது. (1895ஆம் ஆண்டுக் கல்வெட்டறிக்கை; எண் 173—"தெ. இ. க". தொகுதி 5; எண் 737) அக்கல்வெட்டில் செழுவத்தூருடையான் என்பான் அக்கோயிலுக்கு 8மா நிலம் தானம் தந்ததாகக் கூறப்படுகிறது. அப்பொன்னப் பிள்ளையும் செழுவத்தூருடையானும் அக்கல்வெட்டுக்களின் காலத்திற்கு முன் செழுவனூரிலிருந்து வந்து குடியேறிய நற்குடி அல்லது கோட்டை வேளாளர் என்று கருத இடமுண்டு. (சீவைகுண்டத்தில் படி எடுக்கப்பட்ட வேறு கல்வெட்டுகள் 1959-60ஆம் ஆண்டு B 372-83 ஆகியவையும், 1960-61ஆம் ஆண்டு B 341-47ஆகியவையும்ஆகும்) திருச்செந்தூர் வட்டம் ஆத்தூரில் சோமநாதேஸ்வரர் கோயில் கருவறையின் முன்னுள்ள மண்டபத்தின் வடசுவரில் காணப்படும் கல்வெட்டு ஒன்றில் (1929-30 எண் 429) "திருக்காவைபோகக் கூற்றத்துத் தொண்டைமானுர் என்ற செழுவத்தூருடையான் அரையன் திருநெல்வேலி யுடையான்" குறிப்பிடப்படுகிருன்

29. தர்சுடன்: "தென்னிந்திய சாதிகளும் குலங்களும்;" தொகுதி 4 :- "கோட்டை வேளாளரும் தாங்களும் ஓரினத்தவரே எனக் கோட்டைப்பத்து அகமுடையார் கருதுகின்றனர்.

30. அத்தாள நல்லூரில் படி எடுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் 1916ஆம் ஆண்டின் தென்னிந்தியக் கல்வெட்டாராய்ச்சி அறிக்கையில் 423 முதல் 444 முடிய எண்ணுள்ள கல்வெட்டுக்களாகக் குறிப்பிடப் பெற்றுள்ளன.

சிற்றரசன் செவலையைச் சூழ்ந்த நிலங்களை இச்சாதியினருக்குக் கொடையாகி அளித்தான். "செழுவைப் பிள்ளைமார்" என்பதன் மரூஉவே செவலைப் பிள்ளைமார் என வழங்கும் பெயராகும். அதுபோன்றே முதுகுளத்தூர் வட்டத்திலிருந்த முன்குடியிருப்பாகிய செழுவையின் நினைவாகவே செழுவை (அல்லது செழுகை) என்னும் பெயர் இடப்பெற்றுப் பின்னர் அப்பெயர் திரிந்து செவலை என ஆகியிருக்க வேண்டும். எனினும் அவ்வூரார் இப்பொழுது தங்கள் ஊர்ப்பெயர் "சிவகலை" என்பதன் திரிபு எனவே கூறிக்கொள்ள விரும்புகின்றனர். சில ஆண்டுகள் கழித்து சுமார் கி. பி 1273இல்) நற்குடியார் சிலர் கொற்கையிலும் குடியேறினர். சுமார் கி. பி. 1329இல் சாதித்தலைவரான இருங்கோவேள் செவலையிலும் முடிவைத் தானேந்தலிலும் மாறி மாறி வாழ்வாராயினர். பாண்டிய மன்னருக்கு முடிசூட்டும் உரிமை இருங்கோவேளிருக்கு இருந்தமையையே "முடிவைத் தானேந்தல்" என்னும் பெயர் குறிக்கும் என்பர். ஆயினும் இருங்கோவேளிர் தலைமுறை தலைமுறையாக முடிசூட்டப்பட்ட ஊர் என்பது மட்டுமே அவ்வூர்ப் பெயர்ப் பொருளாகலாம். அத்தாள நல்லூரை விட்டு நீங்கியபின் கோட்டை கட்டி வாழ்வதை நற்குடியார் கைவிட்டனர். அத்தாள நல்லூர், அல்லிக்குளம், செழுவை ஆகிய ஊர்களில் இச்சாதியினர் வாழ்ந்து வந்ததாகக் கூறப்படும் கோட்டைகள் தற்காலம் சீவைகுண்டத்திற் காணப்படுவது போன்ற மண்சுவர் மதில்கள் தாமோ. அன்றிக் கோட்டை என்று அழைக்கப்படத்தக்க சிறப்பான கட்டுமானங்களோ தெரியவில்லை. முடிவைத் தானேந்தலில் இருங்கோவேளிரின் வீட்டின் முன் சுமார் 10 அடி உயரமுள்ள, கல்லும் சுண்ணும்பும் வைத்துக்கட்டிய வாயில் ஒன்று இன்றும் காணப்படுகிறது. முன்னுட்களில் அவ்வீட்டையும் அதன் சுற்றுப்புறங்களையும் சுற்றி உயரமான மண்சுவர்கள் இருந்தனவாகத் தோன்றுகின்றன. முடிவைத் தானேந்தலில் குடியேறிய பின் 11-ஆம் பத்தியில் குறிப்பிடப்பட்ட பிற ஊர்களிலும் இச்சாதியார் மெது மெதுவாகக் குடியேறினர். அதற்கும் பிற்காலத்தில் இச்சாதியினர் சிலர் முதுகுளத்தூர் வட்டத்தில் பெருநாழி வட்டாரத்திற்கும், சிலர் கும்பகோணத்தருகில் செம்பொன்மாரிக்கும், சிலர் இராமநாதபுரம் வட்டத்தில் சித்திரன்குடிக்கும் சென்று குடியேறியதாகக் கூறப்படுகிறது. 11-ஆம் பத்தியில் குறிப்பிடப்பட்ட ஊர்களில் சிலவற்றிலும், சீவைகுண்டம் வட்டத்தில் வேறு சில ஊர்களிலும் "நற்குடிவேளாளர்" என்றே தங்களையும் அழைத்துக்கொள்ளும் ஒரு சாதியினர் காணப்படுகின்றனர். அவர்கள் சில தலைமுறைகளுக்குமுன் நற்குடிவேளாளரிட

மிருந்து பிரிந்தனர் என்றும், பிரிந்த பின்னர் இரு வகுப்பினரும் தம்முள் மணவினை ஒழிந்த தனித்தனிப் பிரிவினராகி விட்டனர் என்றும் தோன்றுகிறது.

20, ந. வே வ. (அ) விருந்து தொகுக்கப்பட்ட இருங்கோ வேளிர் கொடிவழி ஒன்று இறுதியில் தரப்பட்டுள்ளது. அத்தாள நல்லூரிலிருந்து செவலைக்குக் குடியேறிய விசயபூபதி யிலிருந்து அக்கொடிவழி தொடங்குகிறது. நற்குடியார் குடியிருந்த ஒவ்வொரு இடத்திலும் இருந்த இருங்கோவேள் தலைமுறையினரின் எண்ணிக்கைக் கீழ்க்கண்டவாறு ந. வே. வ.(அ)ல் தரப்பட்டுள்ளது :—

இடம்	இச்சாதியினர் தங்கியிருந்த காலப் பகுதி	இருங்கோ வேளிர் எண்ணிக்கை
துவாரகை (குசராத்)	கி. மு. 3132 கி. மு. 1930	49
கொற்கை	,, 1930 ,, 882	37
செழுவை	,, 882 கி. பி. 298	51
அல்லிக்குளம்	கி. பி. 298 ,, 922	24
அத்தாள நல்லூர்	,, 922 ,, 1227	12
செவலையும் முடிவைத் தானேந்தலும்	,, 1227 ,, 1944	28
		201

அத்தாள நல்லூர், செவலை, முடிவைத்தானேந்தல் ஆகிய இடங்களுக்குரிய விவரங்கள் சரியாக இருக்கலாம். ஆனால் அத்தாள நல்லூருக்கு முந்திய விவரங்கள் பிற்கால இருங்கோவேளிர் யூகத்தால் கூறியவையே என்க.

21. செவலையிலிருந்த, 8ஆவது இருங்கோவான புகழும் பெருமாள் காலத்தில், அதுவரை முழுமையும் இருங்கோவேளிரின் சொந்தச் சொத்தாக இருந்த முடிவைத் தானேந்தல் நிலங்களைத் தனித்தனி தங்களுக்கே முழு உரிமையுடன் பிரித்துக் கொள்ள முனைந்த முடிவைத்தானேந்தல் குடியானவர் முயன்றனர். அவர் மதுரையில் கம்பணவுடையார் வழிவந்த நாகமநாயக்கரின் துணையைப் பெற்று அம்முயற்சியைத் தடுத்தார் எனக் கூறப்படுகிறது.

22. கி. பி. 1632 முதல் 1659 வரை ஆண்ட திருமலை நாயக்கர் காலத்தில் 16ஆவது இருங்கோவான மாட்டுடை இருங்கோ தன் நில எல்லைகளை வரையறுத்து ஒரு செப்புத் தகட்டுப் பட்டயம் பெற்றார்.[31] பதினேழாவது இருங்கோவான தம்பிரான்குட்டி (கி. பி. 1635 - 75) குட நாட்டில் வெள்ளக்கோயிலைச் சேர்ந்த உய்யக்கொண்டார் என்பாரிடத்தில் சில அடிமைகளை விலைக்கு வாங்கியதாகவும் அதுபற்றி ஒரு செப்புப் பட்டயம்[32] எழுதப் பட்டதாகவும் ந. வே. வ. (அ) குறிப்பிடுகிறது.

(தொடரும்)

---

31. 1884இல் சென்னையில் பதிப்பிக்கப்பட்ட ராபர்ட் சீவெல்லின் "கல்வெட்டுக்கள் பட்டியல்" முதல் பாகத்தில், "செப்புப் பட்டயங்கள் பட்டியலில்" 57 ஆவதாக இப்பட்டயம் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்புத்தகம் இப்பட்டயத்தைப்பற்றிக் குறிப்பிடுவதாவது: "57 (திருநெல்வேலி மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம்) சாலிவாகன சகம் 1549 (கி. பி. 1627) கொல்லம் ஆண்டு 803இல் கொற்கைத் தலைவர் இருங்கோள் பிள்ளைக்கு, ஒரு எல்லைத் தகராறு தீர்ந்ததன் காணமாக விசயரங்க சொக்கலிங்க நாயக்கனால் திருநெல்வேலியில் 'கைத்தாறு' சீமையில் சில நிலங்கள் கொடுத்தமை பற்றியது. கொடுத்த வனுக்கு அரசனுக்குரிய பட்டங்கள் எவையும் வழங்கப்படவில்லை. அவன் கொடிவழியும் குறிப்பிடப்படவில்லை. எனவே தெற்குச் சீமையில் சில நிலங்களைத் தம் வசப்படுத்தியிருந்த நாயக்கர் குலப்பிரிவு ஒன்றைச் சேர்ந்தவனே அவன் எனக் கொள்ள வேண்டும். கி. பி 1704 முதல் 1731 வரை ஆண்ட மதுரை நாயக்க மன்னன் விசயரங்க சொக்கநாதனே இவன் எனத்தவறாக எண்ணிவிடலாகாது."

32. இச்செப்புப்பட்டயம் இருங்கோவேளிரின் பரம்பரையின ரிடம் இருக்கலாம். ந. வே. வ. (அ) படி அப்பட்டயம் பின் வருமாறு: "சாலிவாகன சகாப்தம் 563ஆம் வருசம் செல்லா நின்ற கொல்லம் 817ஆம் வருசம் அற்பசி மாதம் 11ஆம் நெ. சீவைகுண்டம் சுவாமி கள்ளப்பிரான் கோயில் சீபண்டார காரியஞ் செய்வாரில் சீவளநாட்டில் வீரவினோத நல்லூரில் கொற்கைக் காணியாளரில் தம்பிரான் குட்டியாபிள்ளை இருங்கோ பிள்ளை முதலியாருக்கு குடநாட்டின் வெள்ளக் கோவிலில் இருக்கும் வலங்கை உய்யக்கொண்டாரால்......40 பொன்னுக்குக் குடிவிலைமுறி"